முருகப்பெருமான் துணை

**மகான் கூற்றுவ நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.10.2023,** புதன்கிழமை

1. தவபலம் கொண்ட அரங்கனே
தருமனே கலியுக ஞானியே
அவனியில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது தரிவைதிங்கள்
2. திங்களிலே அறுநான்கு திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 24 ம் நாள், 11.10.2023, புதன்கிழமை)
தேசிகன் கேட்க அறிவுரை ஆசி
இங்கனமே கூற்றுவ நாயனாரும்
இயம்பிடுவேன் உலகநலம் பெற வேண்டி
3. வேண்டியே பிரணவக் குடிலாம்
வினைவெல்லும் ஏழாம்படைவீடு
உண்டான உலகோர் கண்டு
உயிர்கொலை நீக்கி வணங்கிவர
4. வருகவே மக்களிடை தெளிவும்
வளர்ச்சி நிலை செயல்வடிவமாகி
தரும சிந்தை தெளிவு திடமுடன்
தணிகாசலன் ஆசிவழிகாட்டலும் வர
5. வருகவே அவரவரும் வினைவெல்லும்
வல்லமை கண்டுத் தேறி
வருங்காலம் உணரும் வாய்ப்பு
வருவாய்கள் கடந்து சேவை
6. சேவை வழி முழுமை காட்டி
செல்வ வளம் சேவைபலம்
அவனிக்கு நன்மை செய்யும்
ஆன்மபலம் ஆன்மீக ஞானபலம்

7. பலம் கூடி பரிபக்குவம் கூடி
பண்பான மக்களுமாகி
வலம்வருவர் ஞானிகளாக
வருங்கால நவகோடி ஞானியர்களுள்
8. ஞானியர்களுள் ஞானியாக
ஞானபண்டிதன் காட்சிபெற்ற
ஞானிகளாகத் தேறிநின்று
ஞான உலகம் படைத்திடுவர்
9. படைத்திட ஞானத் தலைமையை
பண்புடன் உருவாக்கியே
தடை நீக்கி ஞான ஆட்சி
தரணிக்குத் தந்தருள்வர்
10. அருளாக அறமாக வாழும்
அரங்கன் வழி காட்டலதும்
வரமாக மக்களுள் சேர்ந்து
வையகத்தை மாற்றி நிற்கும்
11. நிற்கவே நீதி காக்கப்படும்
நிர்வாகம் சகல துறைகளும்
அற்புதமாய் கருணையோடு இயங்கநேரும்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—